**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.113/2012**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு நீதிமன்ற 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ்வர பாபு | மதம் | : இந்து |
| த/பெ | : ராஜேந்திரன் | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : வழக்கறிஞர் | வட்டம் | : திருத்தணி |

**11.11.2025**

**நீ.ம.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். இந்நீதிமன்றத்தில் இடைமனு எண்.1/2022ல் வழங்கிய கட்டளையின் பேரில் 05.10.2024ம் தேதி காலை 10 மணிக்கு அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகவும் நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 3 ஆகவும் நிலஅளைவையர் வரைபடங்கள் நீ.ம.சா.ஆ 4 மற்றும் நீ.ம.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

(சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாதி தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அனுமதியின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் கொடுத்த பணிகுறிப்பாணையில் (work memo) புல எண்.215/8, 215/9, 215/5A ஆகியவற்றின் வீஸ்தீரணங்களை நிலஅளவையர் உதவியுடன் தனித்தனியாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் புல வரைபடங்களின் புகைப்பட நகல்களை எனது அறிக்கையுடன் இணைத்துள்ளேன் என்றால் ஆமாம். நான் கொடுத்த பணிகுறிப்பாணையில் (work memo)ல் பழைய UDR க்கு முந்தைய புல வரைபடங்களை புல எண்.215, 218க்கு தாக்கல் செய்ய கோரியிருப்பதில்

நான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருப்பதால் தனியாக மனு செய்துதான் பெற முடியும் என கிராம நிர்வாக அலுவலர் கூறிவிட்டார்.

2. புல எண்.215/8, 215/9, 215/5A ஆகியவற்றில் உள்ள அனாதீன நிலங்களை பற்றி எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அனாதீன நிலங்கள் என்று அங்கு இல்லை. தாவா சொத்து உள்ள மனையிட பிரிவாக பிரிக்கப்பட்டுள்ள நிலங்கள் அனைத்தும் இன்றுவரை ஊரக (Rural) நிலங்களாக உள்ளது என்றாலும் நத்தமாக மாற்றப்படவில்லை என்றாலும் புல எண்.215/8A, 215/8B, 215/9A ஆகியவை நத்தமாக மாற்றப்பட்டுவிட்டது. 218/8 நத்தமாக மாறியதா என்பது தெரியவில்லை.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை

மறு விசாரணை – இல்லை